வணக்கம்

ஆகாஷ்வாணி – புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : மலர்விழி

தேதி : 08-10-2026        நேரம் : மாலை 6.10 மணி

---

## தலைப்புச் செய்திகள்

இந்திய விமானப் படை தினம் இன்று கொண்டாடப் படுவதை ஒட்டி, குடியரசுத் தலைவர், பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள், விமானப் படையினருக்கு, வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

டிஜிட்டல் தொலைத் தொடர்பு வசதிகளால் நாட்டில், கல்வி, மருத்துவம், மற்றும், மக்களுக்கான அரசின் எல்லா சேவைகளும் வலுவடைந்து இருப்பதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

57ஆவது ஜிஎஸ்டி சபைக் கூட்டம், புதுடெல்லி பாரத் மண்டபத்தில், மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீத்தாராமன் தலைமையில், இன்று நடைபெற்றது.

எரிசக்தித் துறையில் முக்கிய உற்பத்திக் கேந்திரமாக இந்தியா மேம்பட்டு வருவதாக, மத்திய அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

-------------------------

## விமானப் படை (16)

94ஆவது இந்திய விமானப் படை தினம் இன்று கொண்டாடப் படுவதை ஒட்டி, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு. நரேந்திர மோடி, பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் உள்ளிட்டோர், விமானப் படையினர், மற்றும், அவர்தம் குடும்பத்தினருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர். நாட்டின் பாதுகாப்பில், உயர்தரமான தொழில் முறைத் திறனுடன் முக்கிய பங்களிக்கும் விமானப் படையினர், இயற்கைப் பேரிடர் காலங்களிலும் சிறப்பான சேவை வழங்கி வருவதை, சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ள பதிவில், குடியரசுத் தலைவர் பாராட்டியுள்ளார். பிரதமர் திரு. நரேந்திர மோடி, விமானப் படை தொடர்பான நிகழ்ச்சிகளில் தாம் பங்கேற்றது குறித்த வீடியோ ஒன்றை சமூக ஊடகத்தில் பகிர்ந்து கொண்டு,

புதிய சவால்களையும் எதிர்கொள்ளும் வகையில், இந்திய விமானப் படை வளர்ச்சி அடைந்து வருவதை பாராட்டியுள்ளார். டெல்லி அருகே, ஹிண்டான் விமானப் படை தளத்தில், இன்று நடைபெற்ற விமானப் படை தின விழாவில், விமானப் படையின் தலைவர் ஏர் சீஃப் மார்ஷல் ஏ.பி. சிங் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

-------------------------

## மோடி-மொபைல் 1 (14)

டிஜிட்டல் தொலைத் தொடர்பு வசதிகளால் நாட்டில், கல்வி, மருத்துவம், மற்றும், மக்களுக்கான அரசின் எல்லா சேவைகளும் வலுவடைந்து இருப்பதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். இன்று புதுடெல்லி யஷோபூமியில், 10ஆவது இண்டியா மொபைல் காங்கிரஸ் மாநாட்டை தொடக்கி வைத்து பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார் இந்திய தொலைத் தொடர்புத் துறையின் வளர்ச்சியில், மொபைல் காங்கிரஸ் மாநாட்டிற்கு முக்கிய பங்கு இருப்பதாகவும், இந்தியாவின் வளர்ச்சி, மற்றும், லட்சியங்களை உலகிற்கு எடுத்துக் கூறும் மேடையாகவே, இம்மாநாடு திகழ்வதாகவும், அவர் தெரிவித்தார். **எல்லையற்ற வளர்ச்சி** என்ற கருப்பொருள் அடிப்படையில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள இந்த 4 நாள் மாநாட்டில், நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து, 600 ஸ்டார்ட்-அப் நிறுவனங்களும், 900 நிபுணர்கள் மற்றும் 500 கண்காட்சியாளர்களும், பங்கேற்றுள்ளனர். மாநாட்டில், பிரதமர் ஆற்றிய உரை குறித்து கூடுதல் விவரங்கள்.....

(வாய்ஸ்)

## மோடி-மொபைல் 2 (15)

(வாய்ஸ்)

மொபைல் தொலைபேசிகள் தற்போது, தொலைத் தொடர்பு கருவிகளாக மட்டுமின்றி, மக்களுக்கு நல்லாட்சி வழங்குவதிலும் முக்கிய பங்காற்றுவதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறினார். தற்போது நாட்டின் எல்லா மாவட்டங்களிலும், 5ஜி தொலைத் தொடர்பு சேவை வழங்கப்படுவதாகவும், தீக்ஷா போன்ற டிஜிட்டல் வசதிகளால், தொலை தூர கிராமங்களைச் சேர்ந்த ஏழை குழந்தைகளும் தரமான கல்வி பெற்று வருவதாகவும், அவர் தெரிவித்தார். நாடு முழுவதும், 25 கோடி மாணவர்களை ஆன்-லைன் கல்வி வசதி மூலம் ஒருங்கிணைக்க அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் கூறினார். மக்களுக்கான அரசின்

நூற்றுக் கணக்கிலான சேவைகள், தற்போது மொபைல் தொலைபேசி மூலம் வழங்கப்படுவதை பிரதமர் சுட்டிக் காட்டினார். நேரடி ரொக்க மானியத் திட்டம் மூலமாக, இதுவரை சுமார் 50 லட்சம் கோடி ரூபாய் மானியங்கள், வங்கிக் கணக்கு மூலம் பயனாளிகளுக்கு வழங்கப் பட்டுள்ளதாகவும், இதனால் அரசுக்கு, சுமார் 5 லட்சம் கோடி ரூபாய் மிச்சமாகி இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

------------------------

## மோடி - கட்டுரைகள் (13)

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் 25 ஆண்டுத் தலைமையினால், நாட்டில் வளர்ச்சி அதிகரித்து, கலாச்சார மறுமலர்ச்சியும் ஏற்பட்டிருப்பது குறித்து, ஆன்மீக குரு மாதா அமிர்தாநந்தமயி எழுதியுள்ள கட்டுரை ஒன்றை, பிரதமர் திரு. நரேந்திர மோடி, சமூக ஊடகத்தில் பகிர்ந்து கொண்டுள்ளார். தூய்மை, சமூக சீர்திருத்தம், மகளிர் அதிகார மேம்பாடு, இளைஞர் நலன், சுற்றுச் சூழல் பாதுகாப்பு உட்பட, பல்வேறு துறைகளில், பிரதமர் முக்கிய கவனம் செலுத்தி வருவதை, சிறப்பாக வெளிப்படுத்தும் வகையில் இக்கட்டுரை அமைந்துள்ளது. பிரதமர் திரு. நரேந்திர மோடி, குஜராத் முதலமைச்சராக பதவி வகித்த காலத்தில் இருந்தே, உள்கட்டமைப்பு, தொழில்நுட்பம், மக்கள் நலன், மற்றும், கலாச்சார பாதுகாப்பிற்கு முக்கியத்துவம் அளித்து வருவதை பாராட்டி, மஹாராஷ்ட்ர துணை முதலமைச்சர் திரு. ஏக்நாத் ஷிண்டே எழுதியுள்ள கட்டுரை ஒன்றையும், பிரதமர் சமூக ஊடகத்தில் பகிர்ந்து கொண்டுள்ளார்.

------------------------

## மோடி-சென்னை (12)

பிரதமர் திரு. நரேந்திர மோடி வரும் 11ஆம் தேதி சென்னையில், சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் பூந்தமல்லி-வடபழனி பிரிவை, மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்து வைக்கிறார். அமிர்த பாரத் நிலையங்கள் திட்டத்தின் கீழ், தமிழகத்தில் மறுமேம்பாட்டு செய்யப்பட்டுள்ள, பழனி, பரமகுடி, நாமக்கல், அம்பாசமுத்திரம் உள்ளிட்ட ரயில் நிலையங்களை, காணொலிக் காட்சி மூலம் அவர் திறந்து வைக்கிறார். கோவை பகுதிக்கான 700 கோடி ரூபாய் ரயில்வே திட்டங்களையும், மெய்நிகர் முறையில் பிரதமர் தொடக்கி வைக்கிறார். சென்னையில், பூந்தமல்லியில் இருந்து, மெட்ரோ ரயில் போக்குவரத்தை தொடக்கி வைத்த பின்னர், பிரதமர் சாலை பவனி நடத்துவார் என்றும்,

அன்றைய தினம், இசையமைப்பாளர் இளையராஜாவின் இசை ஆராய்ச்சி மையத்தை அவர் திறந்து வைப்பார் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

-------------------------

## ஜிஎஸ்டி மாநாடு (13)

57ஆவது ஜிஎஸ்டி சபைக் கூட்டம், புதுடெல்லி பாரத் மண்டபத்தில், மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீத்தாராமன் தலைமையில், இன்று நடைபெற்றது. மஹாராஷ்ட்ர முதலமைச்சர் திரு. தேவேந்திர பட்நவிஸ், கர்நாடக முதலமைச்சர் திரு. சிவக்குமார், ஜம்மு-காஷ்மீர் முதலமைச்சர் திரு. உமர் அப்துல்லா, ஹரியானா முதலமைச்சர் திரு. நயாப் சிங் சைனி ஆகியோரும், பல்வேறு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் நிதியமைச்சர்களும் இக்கூட்டத்தில் பங்கேற்றனர். ஜிஎஸ்டி தாவாக்களுக்கு திறம்பட்ட முறையில் தீர்வு காணவும், வரி இணக்க செயல்பாடுகளுக்கான செலவு, மற்றும், நேரத்தை குறைக்கவும், கொள்கை அளவிலான புதிய சீர்திருத்தங்களை கொண்டு வருவது குறித்து, இக்கூட்டத்தில் முக்கியமாக விவாதிக்கப்பட்டது. இதுதொடர்பாக 5 முனை உத்தி ஒன்றையும், நிதியமைச்சகம் இக்கூட்டத்தில் வெளியிட்டு இருப்பதாக, தகவல்கள் கூறுகின்றன.

-------------------------

மின்சாரம் (16)

எரிசக்தித் துறையில் முக்கிய உற்பத்திக் கேந்திரமாக இந்தியா மேம்பட்டு வருவதாகவும், குறிப்பாக, மரபுசாரா ஆதாரம் மூலமான காற்றாலை உற்பத்திக்கு, அரசு முழு ஆதரவு அளிக்கும் என்றும், புதிய, மற்றும், புதுப்பிக்கவல்ல எரிசக்தி ஆதாரங்கள் துறைக்கான மத்திய அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார். இன்று சென்னையில், **காற்று மின்விசை 2026** மாநாட்டை தொடக்கி வைத்து பேசிய அவர், நாட்டில், இவ்வாண்டு மே மாதம் வரை, சாதனை அளவில் 271 கிகாவாட் மின்சாரம் தயாரிக்கப் பட்டுள்ளதாக தெரிவித்தார். கடந்த நிதியாண்டில், காற்றாலை மூலமான நாட்டின் மின்சார உற்பத்தித் திறன், சுமார் 6 கிகாவாட் அளவிற்கு அதிகரித்து இருப்பதாகவும், நடப்பு நிதியாண்டில் கடந்த ஆகஸ்ட் மாதம் வரையிலும், காற்றாலைகள் மூலம் சுமார் 52 கிகாவாட் மின்சாரம் தயாரிக்கப் பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார். காற்று விசை மின் உற்பத்தி தொடர்பான நாட்டின் மிகப் பெரிய Wind

Energy மாநாடு மற்றும் கண்காட்சி, இம்முறை சென்னையில் நடைபெறுவதும், காற்றாலை மூலமான மின் உற்பத்தியில், குஜராத் மாநிலத்திற்கு அடுத்தபடியாக, தமிழகம் 2ஆம் இடத்தில் இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

-------------------------

## மக்கள் சேவை மூலமான தேச சேவை 1 (13)

**மக்கள் சேவை மூலமான தேச சேவை** என்ற தாரக மந்திரத்தின் அடிப்படையில், பொது சேவையில் 25 ஆண்டுகளை பூர்த்தி செய்யும் பிரதமர் திரு நரேந்திர மோடியின் **சேவைப் பயணம்**, இன்று வரை அயராத உறுதிப்பாட்டுடன் தொடர்கிறது. **சேவை மற்றும் நல்லாட்சி** என்னும் பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வைக்கு ஏற்ப, 2047-ஆம் ஆண்டிற்குள் முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்தும் இலக்கை நோக்கி, நாடு தொடர்ச்சியாக பயணித்து வருகிறது. **அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி - அனைவருக்கும் சமூக அதிகாரம்** என்னும் அரசின் கொள்கையினால், நாட்டு மக்களின் வாழ்க்கையில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. வேளாண் துறையில், வேப்பெண்ணெய் பூசிய யூரியா உரத்தின் பயன்பாட்டினால், பல்முனை பலன்கள் ஏற்பட்டுள்ளது குறித்து, இன்று, **சேவா சங்கல்ப் அபியான்** என்னும், இந்த சிறப்பு தொடரில் காண்போம்...

(வாய்ஸ்)

மக்கள் சேவை மூலமான தேச சேவை 2 (19)

(வாய்ஸ்)

இந்தியாவில் தயாரிக்கப்படும் யூரியாவில், **வேப்பெண்ணைய் பூச்சு** இருக்க வேண்டும் என்பதை, 2015ஆம் ஆண்டு செப்டம்பரில் மத்திய அரசு, கட்டாயமாக்கியது. அவ்வாண்டு டிசம்பர் மாதம், இந்த நிபந்தனை, இறக்குமதி யூரியாவிற்கும் நீட்டிக்கப்பட்டது. அரசின் இம்முடிவினால், நாட்டில் நீண்டகாலமாக நிலவிய, அதிகச் செலவுள்ள ஒரு பிரச்சனைக்கு, முடிவு காணப்பட்டது. அடக்கச் செலவை விட மிகக் குறைந்த விலையில் விவசாயிகளுக்கு விற்பதற்கான யூரியா, விவசாயிகளுக்கு செல்லாமல், தொழில் நிறுவனங்களின் தேவைக்கு மடைமாற்றம் செய்யப்பட்டு வந்ததே, இம்முக்கிய பிரச்சனையாகும். இதனால் யூரியா மீதான அரசின் மானியங்கள் விவசாயிகளுக்கு கிடைக்காமல், தனியார் லாபமாக மாறி வந்தன. வழக்கமான யூரியாவிற்கு பதிலாக, **வேம்பு பூசிய யூரியா**

விற்பனை கட்டாயமாக்கப் பட்டதால், தொழிற்சாலைகளில், விவசாயிகளுக்கான யூரியாவின் பயன்பாடு தடுக்கப்பட்டது. அதேசமயம், வேம்பு பூசிய யூரியாவை, விவசாயிகள் வயலில் பயன்படுத்தும் போது, நைட்ரஜன் வெளியீட்டு வேகம் குறைந்து, பயிர்களின் நைட்ரஜன் உள்ளீர்ப்புத் திறன் வலுப்பெறுவதால், மகசூல் அதிகரிப்பதாகவும், கண்டறியப் பட்டுள்ளது. வேம்பு பூசிய யூரியா விற்பனை கட்டாயமாக்கப் பட்டதால், தொழில் துறைக்கு திருப்பி விடப்படும் யூரியாவின் அளவு, முற்றிலுமாக குறைந்து, அரசுக்கு சுமார்

## மக்கள் சேவை மூலமான தேச சேவை 3 (8)

10 ஆயிரம் கோடி ரூபாய் சேமிப்பு கிடைத்து இருப்பதாக, மதிப்பீடுகள் கூறுகின்றன. புதிய நடைமுறை அமலுக்கு வந்த பின்னர், நாட்டின் நெல் உற்பத்தி, 5.79 சதவிகிதம் அதிகரித்துள்ளது. துவரை, சோயா, மக்காச் சோளம், மற்றும், கரும்பு உற்பத்தியிலும், கணிசமான அதிகரிப்பு இருப்பதாக, புள்ளி விவரங்கள் மூலம் தெரியவந்துள்ளது. வேம்பு பூசிய யூரியா விற்பனை என்ற ஒரேஒரு முடிவினால், அரசு மானியத்தில் நீண்டகாலமாக நிலவிய கசிவு முற்றிலுமாக அடைக்கப்பட்டு, வேறு நன்மைகளும் ஏற்பட்டிருப்பதை, உறுதியாக சொல்லலாம்.

-------------------------

## வானிலை (12)

இன்று, கோவை மாவட்டத்தின் மலைப் பகுதிகள், மற்றும், நீலகிரி, தேனி மாவட்டங்களின் ஓரிரு இடங்களில், பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மதுரை, திண்டுக்கல், கன்னியாகுமரி, புதுக்கோட்டை, தஞ்சை, நாகை, திருவாரூர், மயிலாடுதுறை உள்ளிட்ட மாவட்டங்கள், மற்றும், காரைக்கால் பகுதியில், பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழை பெய்யக் கூடும் என்றும், தமிழகத்தின் இதர பகுதிகள், மற்றும், புதுச்சேரியில், லேசான மழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும், வானிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. வரும் 14ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது. இதற்கிடையே கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக, நீலகிரி மாவட்ட கோடநாடு உள்ளிட்ட இடங்களில், தலா 7 செ.மீ மழை பதிவாகி உள்ளது.

-------------------------

மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள், கல்வியாளர்கள், ஸ்டார்ட்-அப் நிறுவனங்கள் உட்பட, விரிவான பல்வேறு தரப்பினருக்கு, ஏஐ தொழில்நுட்ப வசதிகள் கிடைப்பதை, அரசு உறுதிப்படுத்தும் என, மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில், நடப்பாண்டிற்கான, உலக மேம்பாட்டு அறிக்கையை வெளியிட்டு பேசிய அவர், செயற்கை நுண்ணறிவை பயன்பாட்டில் கொண்டு வந்து, பயன்பெற்ற நாடுகளில் ஒன்றாக இந்தியா திகழ்வதாக கூறினார். உற்பத்தித் திறனை அதிகரித்து, உற்பத்திச் செலவை குறைப்பதும், வருமானத்தை பெருக்கி, மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதுமே, தொழில்நுட்பத்தின் நிஜமான பலன்கள் என்று அமைச்சர் கூறினார். புதிய தொழில்நுட்பங்களால், சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு ஏராளமான வாய்ப்புகள் கிடைக்கும் என்று, அவர் மேலும் தெரிவித்தார்.

-------------------------

## மீண்டும் தலைப்புச் செய்திகள்

இந்திய விமானப் படை தினம் இன்று கொண்டாடப் படுவதை ஒட்டி, குடியரசுத் தலைவர், பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள், விமானப் படையினருக்கு, வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

டிஜிட்டல் தொலைத் தொடர்பு வசதிகளால் நாட்டில், கல்வி, மருத்துவம், மற்றும், மக்களுக்கான அரசின் எல்லா சேவைகளும் வலுவடைந்து இருப்பதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

57ஆவது ஜிஎஸ்டி சபைக் கூட்டம், புதுடெல்லி பாரத் மண்டபத்தில், மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீத்தாராமன் தலைமையில், இன்று நடைபெற்றது.

எரிசக்தித் துறையில் முக்கிய உற்பத்திக் கேந்திரமாக இந்தியா மேம்பட்டு வருவதாக, மத்திய அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.